www.aiche.org/ccps

Process Safety Beacon

http://www.aiche.org/CCPS/Publications/Beacon/index.aspx

Messages for Manufacturing Personnel

This issue sponsored by ioMosaic
Minimizing risk. Maximizing potential.®
www.iomosaic.com

# மறைந்திருக்கும் தீங்குகள் !

August 2019

ஒரு சில தீங்குகள் வெளிப்படையாக கண்ணுக்கு தெரியும். பல தீங்குகள் அப்படித் தெரியாது. கூரிய கத்தி வெட்டிவிடும் என்பதால் நாம் அதற்குறிய கவனத்தை கொடுப்போம்.




சரியான லேபிள் பொருத்தப்பட்டு பீப்பாயில் வைக்கப்பட்டுள்ள அபாயகரமான ரசாயணங்களுக்கும் இது பொருந்தும். ஆனால் ஒரு குழாய் அல்லது கலன் காலியாக உள்ளதா அல்லது நிரம்பி உள்ளதா என கணிப்பது கடினம். உற்பத்தி செயலில் பொருட்களினாலும், ஆற்றல்களினாலும் ஏற்படும் தீங்குகளை புரிந்து கொள்வது மேற்கூறியதைவிட கடினம்.

பிரித்தெடுக்கும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த பிளான்டின் குழாய் ஒன்றில் இருந்த கந்தக அமிலத்தால் ஒரு தொழிலாளி காயமடைந்தார். அந்த குழாய் ஆவணப்படுத்தப்படவும் இல்லை. அதில் லேபிலும் இல்லை. ஆகவே நாம் என்ன செய்ய வேண்டும்? சரியான விவரங்கள் அறியும்வரை இத்தகைய தீங்குகளை மோசமானதாகவே கருத வேண்டும்.

## உங்களுக்கு தெரியுமா?

இது ஏன் முக்கியம்?
பார்க்க கூடிய அல்லது அறியக் கூடிய தீங்குகளை மட்டுமே நம்மால் நிர்வகிக்க முடியும்.
கெமிக்கல் மற்றும் பெட்ரோ கெமிக்கல் பிளானட்களில் இயக்க நிலையில் இருக்கும் கருவிகள் அதிகம் இருக்காது. ஆகவே மறைந்திருக்கும் தீங்குகளை கண்டறிந்து, உணர்ந்து அவற்றை நிர்வகிக்க தேவையான அமைப்புகளை நடைமுறை படுத்த வேண்டும்.

மிக முக்கியமாக குழாய் அல்லது கலனை திறக்கும்போது அதில் உள்ள தீங்குகளை அறிந்து கொள்வது அவசியம். குழாய் அல்லது கலனில் என்ன இருக்கிறது அல்லது என்ன இருந்தது, என்ன வெப்பநிலை, என்ன அழுத்தத்தில் இயக்கப்பட்டது போன்றவற்றை அறியாமல் அவற்றை திறக்க முற்படுவது ஆபத்தில் முடியும்.

## நீங்கள் என்ன செய்ய வேண்டும் ?

➢உங்கள் செயல்முறை மற்றும் எந்திரங்களின் ஒவ்வொரு பாகங்களை பற்றியும் தெரிந்து வைத்துக் கொள்ளவும். வினைகலனாக இருந்தால் இது நேரத்திற்கு ஏற்ப மாறும்.

➢குழாய் மற்றும் எந்திரங்களில் சரியான லேபிள் சரியானதா, பார்க்கும்படி/படிக்கும்படி உள்ளதா சரி பார்த்துக்கொள்ளவும்.

➢எந்திரம் அதன் சேவையில் இருந்து வெவ்வேறு தொகுதிக்கு (batch) மாற்றப்பட்டாலோ அல்லது எந்திரத்திலேயே மாற்றம் செய்யப்பட்டாலோ "மாற்றங்களை நிர்வகிக்கும்" (Management of Chang - MOC) வழிமுறைப்படி அவைகள் சீராய்வு செய்யப்படுகின்றனவா என்பதை உறுதி செய்துகொள்ளவும். சீராய்வின் போது எந்திரங்களின் லேபில்களையும் மேம்படுத்த வேண்டும் என்பதை கருத்தில் கொள்ளவும்.

➢குழாய் திறப்பு, கலன் திறப்பு மற்றும் லாக் அவுட் டேக் அவுட் (Lock Out and Tag Out -LOTO) அனுமதிக்கான வழிமுறைகளை பின்பற்றவும்

➢இது போன்ற வேலைகளை தொடங்கும் போது வேலைக்கான அனுமதி ( work permit) நடைமுறைகளை முழுமையாக பின்பற்றவும். இதில் ஏதேனும் புரியாத விஷயங்களோ, தீர்க்க முடியாத விஷயங்களோ இருந்தால் யாரிடமேனும் கேட்கவும். 'வேலைக்கான அனுமதி' நடைமுறைகளை சரியாக பின்பற்றாததால் பல விபத்துகள் (ஜுன் 2018 பீகானை பார்க்கவும்) ஏற்பட்டுள்ளன.

**தீங்கை கண்டறிவது- செயல்முறை பாதுகாப்பின் முதல்படி!**

©AIChE 2019. All rights reserved. Reproduction for non-commercial, educational purposes is encouraged. However, reproduction for any commercial purpose without express written consent of AIChE is strictly prohibited. Contact us at ccps_beacon@aiche.org or 646-495-1371.